**செய்தி வெளியீடு எண்: 43/2024** **நாள்: 27.05.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**மனித வளத்தில் சிறந்த நடைமுறைகளுக்கான விருதினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பெற்றது**

தமிழ்நாடு இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு (FICCI) நடத்திய மூன்றாவது மனிதவள மேலாண்மை உச்சி மாநாடு 2024-இல், பொது மற்றும் பெரிய நிறுவனங்கள் பிரிவின் கீழ் சிறந்த மனிதவள நடைமுறைகளுக்கான வெற்றியாளராக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு ஸ்கோர் 2024 விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது, நேர்மறை மற்றும் பயனுள்ள பணிச்சூழலை வளர்ப்பதில் அர்ப்பணிப்பு மற்றும் புதுமையான உத்திகளை வெளிப்படுத்தியதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக தலைமை பொது மேலாளர் (மனிதவளம் மற்றும் சட்டம்) திரு.G.ராஜரத்தினம் பெற்றுக்கொண்டார். கூடுதல் பொது மேலாளர் (மனித வளம்) T.P.வினோத் குமார், துணை பொது மேலாளர் (மனிதவளம்) டாக்டர். P.ரூபா ராணி, மேலாளர் (மனித வளம்) R.G.ரஞ்சித், உடன் இருந்தனர்.

இந்த விருதுகள் சென்னை மெட்ரோ இரயிலின் மனிதவளத்துறையின் சாதனையைக் குறிக்கின்றன, நாட்டின் முன்னணி நிறுவன பிராண்ட் மற்றும் மனிதவளத் துறையின் அர்ப்பணிப்பைப் பாராட்டுகிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**